**கங்க இஹல கோராளே பிரதேச சபை - 2023**

-----------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கங்க இஹல கோராளே பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான செலவினக் கணக்கு, பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளிற்குரிய தகவல்களுடன் கூடிய நிதிக்கூற்றுக்களுடன் தொடர்பான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கங்கஇஹல கோராளே பிரதேச சபையின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.6 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்.எல்.ஏயூ.எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந்த கணக்காய்வு நியமங்கள் தொடர்பாக எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவம் மற்றும் தொடர்புடைய கட்டுப்படுத்தும் தர்ப்பினரின் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயமாக முன்வைத்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றதாக நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடும் செயற்பாடுகள் தொடர்பாக பரீட்சிக்கும் பொறுப்பு, தொடர்புடைய தரப்பினரால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16 (1) உப பிரிவின் பிரகாரம், பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரியவாறு புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்ல வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக் கொள்வதற்காகவேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைமுறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- பிரதேச சபையின் கட்டுப்பாட்டு சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்து மூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிறுவனம் இணங்கியிருந்ததா என்பதும்,
- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்
- வளங்கள் சிக்கனமாக, வினைத்திறனாக மற்றும் ஆக்கபூர்வமாக காலவரையறைகளினுள் மற்றும் உரிய சட்ட விதிகளிற்கு இணங்க பெறுகை செய்யப்பட்டு பயன்படுததப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பின்வரும் விடயங்கள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் உள்ளடங்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்படும் தேவைப்பாடுகள் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்படும் தேவைப்பாடுகள் பிரகாரம் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | காணி மற்றும் கட்டிட பேரேட்டு கணக்கிற்கு பிரதியிடும் போது, ரூபா 1,599,000,000 தொகையை கூடுதலாக கூட்டிய காரணத்தால், சபையின் காணி மற்றும் கட்டிடம் மற்றும் மூலதனத்திற்கு வருமானத்திலிருந்து பங்களிக்கும் கணக்கு அப் பெறுமானத்தால் கூட்டி காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்வரும் ஆண்டில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பதென. | கணக்கு மீதியை சரி செய்ய வேண்டும். |
| (ஆ) | கடந்த ஆண்டில், தொண்டர் சேவை சங்கங்களிற்கு கதிரைகள் வழங்குவதற்காக கடன்கொடுனராக்கப்பட்ட ரூபா 1,678,904 மீளாய்வாண்டில் பதிவழிக்க அங்கீகாரம் கிடைத்திருந்த போதும், பதிவழித்திருக்காத காரணத்தால், கடன் கொடுனர் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | இந்த தொகையை அரச வருமானத்திற்கு எடுக்க நடவடிக்கை எடுப்பதென. | கணக்கு மீதியை சரி செய்ய வேண்டும். |

### 1.7 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் தொடர்பு | இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டம் | | | |
| | இலக்கம் 122(1) பிரிவு | உடல் விருத்தி நிலையம் மற்றும் இ - நென பியசவிற்காக ரூபா 648,950 பெறுமதியான கட்டணம் அறவிட்டிருந்த போதும், அதற்காக துணைச் சட்டம் விதித்திருக்கவில்லை. | துணைச் சட்டம் விதிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | சட்ட ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| (ஆ) | 1952 இன் 06 இலக்க உள்ளூராட்சி நிறுவன (அங்கீகார துணை சட்டம்) சட்டம் | ரூபா 123,625 பெறுமதியான 33 அறிவித்தல் பலகைகளிற்காக பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறிவித்தல் பலகைகளை அகற்ற நடவடிக்கை எடுப்பதென. | கால ரீதியாக கட்டணம் அறவிட வேண்டும். |
| (இ) | 1988 இன் 15 இலக்க பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதிக் கோவை | | | |
| | 59 ஆம் விதி | பிரதேச சபையினால் அதிகார பிரதேசத்தினுள் வருட ஆரம்பத்தில் கைத்தொழில் மற்றும் வர்த்தக வியாபார வரி தொடர்பான கணிப்பீட்டை மேற்கொண்டிருக்கவில்லை. | முறையான திட்டம் ஒன்றிற்கமைய கணிப்பீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது என | சட்ட ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| (ஈ) | 2020 செப்டம்பர் 28 திகதிய 2020/06 இலக்க மத்திய மாகாண, உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் 02.2(1) பந்தி | நிலையான வைப்புக்களிலுள்ள நிதி பயன்படுத்தப்பட்டு செய்யப்படும் மூலதன கருத்திட்டங்களிற்கு உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதும், அவ்வாறு செய்யாது ரூபா 20,000,000 பெறுமதியான 04 நிலையான வைப்புக்களை விடுவித்து மூலதன கருத்திட்டங்களிற்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | உள்ளூராட்சி ஆணையாளரின் அறிவுறுத்தலை பெற்று நடவடிக்கை எடுக்க எதிர்பார்ப்பதென. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களிற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்ட்ட நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் 2023 திசெம்பர் 31 திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 23,849,286 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 37,491,762 ஆனது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில்லிட்ட வருமானம், சேகரித்த வருமானம் மற்றும நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்கு மற்றும் கடந்த ஆண்டிற்குரியதாக சமர்ப்பிக்கப்பட்டு இருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பில்லிட்ட வருமானம், சேகரித்த வருமானம் மற்றும நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் பின்வருமாறு

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | **வருமான மூலம்** | **மதிப்பிடப்பட்ட வருமானம்** | **பில்லிட்ட வருமானம்** | **சேகரித்த வருமானம்** | **திசெம்பர் 31 திகதி மொத்த நிலுவை** | **மதிப்பிடப்பட்ட வருமானம்** | **பில்லிட்ட வருமானம்** | **சேகரித்த வருமானம்** | **திசெம்பர் 31 திகதி மொத்த நிலுவை** |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரி மற்றும் வரி | 5,982,520 | 2,936,972 | 3,151,859 | 1,423,185 | 4,435,115 | 3,394,445 | 3,767,931 | 1,637,821 |
| (ii) | வாடகை | 20,937,500 | 6,653,946 | 6,392,400 | 1,586,247 | 19,903,000 | 8,459,778 | 8,553,949 | 1,324,701 |
| (iii) | அனுமதிப்பத்திர கட்டணம் | 725,100 | 180,000 | 184,500 | 40,500 | 575,100 | 635,758 | 568,758 | 45,000 |
| (iv) | ஏனைய வருமானம் | 62,673,000 | 32,685,162 | 33,362,273 | 30,267,490 | 40,937,500 | 56,326,332 | 46,110,238 | 30,944,601 |
| | மொத்தம் | 90,318,120 | 42,456,080 | 43,091,032 | 33,317,422 | 66,450,715 | 69,342,213 | 59,192,476 | 33,952,123 |

### 2.2.2. வருமான சேகரிப்பின் செயலாற்றுகை

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றுகை தொடர்பான அவதானிப்புக்கள் பின்வருமாறு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) வீதவரி** | | |
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று 05 ஆண்டுகளை விஞ்சிய 86 வீதவரி அலகுகளிலிருந்து நிலுவை வீதவரி வரி ரூபா 353,723 தொகை அறவிடப்பட்டு இருக்கவில்லை இது தொடர்பாக பிரதேச சபை சட்டத்தின் 158(1) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஆதன உரிமையாளர்களை இணங்கான கங்கஇஹல கோரளே கமநல சேவைகள் திணைக்களத்திற்கு கடிதமொன்று அனுப்பியுள்ளதென. | நிலுவை வருமானம் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| **(ஆ) ஏக்கர் வரி** | | |
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று 05 ஆண்டுகளை விஞ்சிய 98 அலகுகளிலிருந்து ரூபா 80,862 நிலுவை ஏக்கர் வரியை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை வரித் தொகையை அறவிட நடவடிக்கை எடுப்பதென. | நிலுவை பில்லிடப்பட்ட வருமானத்தை கால ரீதியாக அறவிட வேண்டும். |

**(இ) வாடகை**

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று 05 ஆண்டுகளை விஞ்சிய 17 கடையறைகளிலிருந்து ரூபா 1,337,962 நிலுவை கடையறை வாடகையை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை கடையறை வாடகையை அறவிட நடவடிக்கை எடுப்பதென. | நிலுவை கடையறை வாடகையை அறவிட வேண்டும். |

**(ஈ) முச்சக்கர வண்டி தரிப்புக் கட்டணம்**

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று 02 ஆண்டுகளை விஞ்சிய காலமாக நிலவிவரும் 97 நபர்களிடமிருந்து பெற வேண்டிய ரூபா 1,347,930 நிலுவை முச்சக்கர வண்டி கட்டணத்தை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை தொகையை அறவிட நடவடிக்கை எடுப்பதென. | நிலுவை வருமானத்தை அறவிட வேண்டும். |

**(உ) நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரை கட்டணம்**

| | | |
|---|---|---|
| மாகாண சபை பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று பெற வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 794,265 மற்றும் முத்திரை கட்டணம் ரூபா 29,299,350 ஆனது. | பெற வேண்டிய மீதியை அறவிட நடவடிக்கை எடுப்பதென. | நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரை கட்டணத்தை அழைப்பித்துக் கொள்ள வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தால் ஒப்படைத்துள்ள கடமைகளை மேற்கொள்ளல்

பிரதேச சபை சட்டத்தின் 3 பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் பொது பாதைகள் மீதான நடவடிக்கைகளை முறையாக்கல் மற்றும் கட்டுப்படுத்தல், பொது மக்களின் நலன்கள், வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் மேற்கொள்ள வேண்டியிருந்த பணிகளை மேற்கொள்வது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபையினால் நடாத்திச் செல்லும் 08 கருத்திட்டங்களின் நீர பரீட்சிப்பும் மேற்கொள்ளப்பட்டு இருக்காததுடன், பாவனையாளர்களிற்கு வழங்கும் நீரின் தரத்தை இனங்கண்டிருக்கவில்லை. அதன் மூலம் பிரதேச மக்களின் சுகாதாரம் தொடர்பாக போதிய கவனம் செலுத்தப்படவில்லையென அவதானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் நீரை சுத்திகரித்து வழங்க நடவடிக்கை எடுப்பதென. | நீரின் மாரியை பரீட்சித்து பொது மக்களிற்கு சுத்தமான குடிநீரை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பிரதேச சபை சட்டத்தின் 126 பிரிவின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று 03 விடயங்களிற்காக சபையினால் துணைச் சட்டம் விதித்திருக்கவில்லை. | துணைச் சட்டத்தை விதிக்க நடவடிக்கை எடுப்பதென. | துணைச் சட்டத்தை விதித்துக் கொள்ள வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியில் வேலை கடன்படுனர் கணக்கு மீதி ரூபா 3,220,178 ஆக இருந்ததுடன், அவற்றில் ஆண்டு 01 இற்கும் 05 இற்கும் இடையிலாக காலத்தை விஞ்சியிருந்த மீதி ரூபா 2,680,414 மற்றும் 05 ஆண்டுகளை விஞ்சிய மீதி ரூபா 96,829 தொகையினை அறவிட்டிருக்கவில்லை. | கடன்படுனர் கணக்கு மீதிகளை தீர்த்துக் கொள்ளுமாறு குறித்த நிறுவனங்களிற்கு கடிதம் அனுப்பியுள்ள போதும், இதுவரை அத் தொகை கிடைக்கவில்லையென. | பெற வேண்டிய கணக்கு மீதிகளை அறவிட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியில் வேலை கடன்கொடுனர் கணக்கு மீதி ரூபா 10,884,224 ஆக இருந்ததுடன், அவற்றில் ஆண்டு 01 இற்கும் 05 இற்கும் இடையிலாக காலத்திற்குரிய மீதி ரூபா 4,359,198 மற்றும் 05 ஆண்டுகளை விஞ்சிய மீதி ரூபா 428,169 தொகையினை தீர்திருக்கவில்லை. | எஞ்சிய தொகையையும் விரைவில் தீர்க்க நடவடிக்கை எடுப்பதென. | செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளை தீர்க்க வேண்டும். |
| (இ) | 2012 ஆகஸ்ட் 03 இன் 1770 இலக்க வர்த்தமானியில் மேம்படுத்திய பிரதேசங்களாக 05 புதிய பிரதேசங்கள் பெயரிடப்பட்டுள்ள போதும், மீளாய்வாண்டு இறுதிவரை 11 ஆண்டுகள் கடந்துள்ள போதும், ஆதனங்களை இனங்காணும் நடவடிக்கையை மேற்கொண்டு ஆதனங்களை மதிப்பிட்டு வீதவரி அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு மதிப்பீடு செய்வதற்காக அறிக்கையொன்றை அனுப்ப நடவடிக்கை எடுப்பதென. | ஆதனத்தை இனங்கண்டு வீதவரி பிரதேசங்களை பெயரிட்டு, வரி அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | கம்பளை நகர சபையினால் 135 வீதவரி அலகுகளிலிருந்து வீதவரி அறவிடப்பட்ட வீகுலவத்த பிரதேசம் 2018 ஆண்டில் எல்லை நிர்ணயத்தின் பின்னர் கங்கஇஹல கோராளே பிரதேச சபைக்கு உரித்தான போதும், அப் பிரதேசத்தில அமைந்துள்ள ஆதனங்களை மதிப்பிட்டு வீதவரி அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வரி அறிவிடும் இயலுமை பற்றி விசாரிக்க கடிதம் அனுப்பியுள்ளதென. | மதிப்பிட்டு வரி அறவிட வேண்டும். |

### 3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபை அதிகார பிரதேசத்தின் சமர்செட் கொரோனா சிகிச்சை நிலையம் கடந்த ஆண்டு மார்ச் 25 திகதி பணிகளை முடிவுறுத்தி இந்த நிலையத்திற்கு பல நிறுவனங்கள் இடமிருந்து அன்பளிப்பாக கிடைத்த 297 கட்டில்கள் மற்றும் பாகங்கள், 301 பிளாஸ்டிக் கதிரைகள், 23 பலகை ஸ்டுட்கள், 04 தொலை காட்சிகள் மற்றும் பாகங்கள், 03 சலவை இயந்திரங்கள், 08 சாப்பாட்டு மேசைகள், ஒரு மின்பிரப்பாக்கி, 63 விசிரிகள், 16 CCTV கெமராக்கள், 07 நீர் மோடார்கள், 07 பிளாஸ்டிக் நீர் தாங்கிகள், 07 நீர் சுத்திகரிப்பான்கள் மற்றும் ஒரு குளிரூட்டி உட்பட உபகரணங்கள் கடந்த ஆண்டு மார்ச் 25 திகதி கங்கஇஹல கோராளே பிரதேச செயலாளரினால் கங்கஇஹல கோராளே பிரதேச சபையின், தவிசாளரிற்கு எழுத்து மூலம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இந்த உபகரணங்களில் 10 மின் விசிரிகள் 12 கட்டில்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் மற்றும் ஒரு சலவை இயந்திரம் மாத்திரம் விநியோகிக்கப்பட்டதாக உறுதி செய்தல் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், ஏனைய பண்டங்கள் விநியோகித்த தகவல்கள் சமர்ப்பிக்கப்படாததால், இது தொடர்பாக விசாரணையொன்றை நடாத்தி பொறுப்பு வாய்ந்தவர்களை தீர்மானித்து தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அனைத்து பண்டங்களையும் ஆவணப்படுத்தல் பிரதேச செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. சபையினால் வழங்கிய பண்டங்களை மீள் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. ஏனைய பண்டங்கள் அமைச்சர் அவர்களின் அறிவுரைப்படி விகாரைகள் மற்றும் நிறுவனங்களிற்கும் வழங்கும் நோக்கில் மஹிந்தாநன்த அமைப்பிற்கு வழங்கப்பட்டுள்ளன. | தேவைப்பாட்டை இனங்கண்டு ஒழுங்கு முறைமைப்படி தேவையான ஆவணங்களை மற்றும் கோவைகளை பேணிக் கொண்டு வெளியிடல் வேண்டியதுடன், முறையற்ற விநியோகம் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் 19(xi) பிரிவின் பிரகாரம் விடய பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரத்தை பெறாது, சபைக்கு சொந்தமான எத்கால மைதானத்திற்கு அருகில் அமைந்துள்ள இரண்டு மாடி கட்டிடத்தை எத்கால பொலிஸ் நிலையத்திற்கு 2021 நவம்பர் 01 திகதி முதல் வழங்கியுள்ள போதும், மீளாய்வாண்டு இறுதிவரை உடன்படிக்கை செய்து கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. 2021 நவம்பர் 01 திகதி முதல் மீளாய்வாண்டு திசெம்பர் 31 வரை பொலிஸ் நிலையத்திற்கு வழங்கிய இரண்டு மாடி கட்டிடத்திற்கு பெற்றுக் கொண்டு மதிப்பீட்டின் பிரகாரம், ரூபா 910,000 வரித் தொகையை அறவிட்டிருக்கவில்லை. | காணியை சுவீகரித்த பின்னர் உடன்படிக்கை செய்து கொள்ளவும் நிலுவை தொகையை அறவிடவும் நடவடிக்கை எடுப்பதெனா. | உடன்படிக்கை கைச்சாத்திட்டு வரித் தொகையை அறவிட வேண்டும். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் (நிதி மற்றும் நிர்வாகம்) 128 பிரிவின் பிரகாரம் பிரதேச சபை பயன்படுத்தும் 30 காணித் துண்டுகளை சுவீகரிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சுவீகரிக்க நடவடிக்கை எடுப்பதென. | சபைக்கு சொந்தமான காணிகளின் சட்ட ரீதியான உரிமையை உறுதி செய்ய கொள்ள வேண்டும். |
| (ஆ) | காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு சொந்தமான 01 ஏக்கர் 03 ரூட் 05.26 பர்சஸ் உடைய குருந்துவத்தயில் அமைந்துள்ள காணியை சபைக்கு சுவீகரிக்க மீளாய்வாண்டு ஏப்ரல் 28 திகதி ரூபா 9,993,090 தொகையை காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு செலுத்தியுள்ள போதும், மீளாய்வாண்டு இறுதிவரை உரிமையை சுவீகரிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. சபையினால் 1997 ஆண்டு முதல் 2010 ஆண்டு வரையான காலத்தினுள் இக் காணியை பயன்படுத்தியதற்காக காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு ரூபா 87,360 பாவனைக் கட்டணமொன்றும் செலுத்தப்பட்டுள்ளது. | உறுதியை விரைவில் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுப்பதென. | உரிமையை சுவீகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.5 கருத்திட்டம், பணிகள் அல்லது மூலதன வேலைகளின் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கட்டிடங்கள் 02 இனை நிர்மாணிப்பதற்காக ரூபா 11,285,645 தொகை செலவிடப்பட்டிருந்த போதும், பாதியளவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளதால், எதிர்பார்த்த வெளியீட்டு மட்டத்தை (output) அடைந்திருக்கவில்லை. | இந்த வேலையை பூர்த்தி செய்து எதிர்பார்த்த விளைவு மட்டத்தை அடைந்து கொள்ள எதிர்பார்ப்பதென. | கருத்திட்டத்தை பூர்த்தி செய்து பொது மக்கள் தேவைப்பாட்டை மேற்கொள்ள வேண்டும். |

### 3.6 ஒப்பந்த நிர்வாக முறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் நிர்மாண கருத்திட்டங்களிற்கு வடிவமைப்பு பலகை (Form Work) இற்காக பாதை நியம வீதங்களின் (HSR) பிரகாரம் ST 57 விகிதங்களை பயன்படுத்தாது ST 64 விகிதத்தில் மதிப்பிட்ட காரணத்தால் 13 கருத்திட்டங்களிற்கு ரூபா 170,528 ஆன தொகை கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | ST 64 இனை பயன்படுத்த நடவடிக்கை எடுத்தது ஒழுங்காக பணிகளை பூர்த்தி செய்வதெற்கென. | குறித்த வீதங்களின் மீது மதிப்பீடு செய்யாத அலுவலர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2023 ஆண்டில் இலங்கை மின்சார சபையின் ஏற்பாட்டின் மீது உலபனே மல்வத்த ஜயதிஸ்ஸ அவர்களின் வீட்டிற்கு அருகில் பாதுகாப்பு மதில் நிர்மாணித்தல் - ரூபா 8,199,561 | | |
| (i) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதி VIII அதிகாரம் 03 பந்தி பிரகாரம், டென்டர் நடைமுறையை பின்பற்றாது ரூபா 8,442,935 ஆன மதிப்பீட்டு மொத்த பெறுமதி ரூபா 2,000,000 வீதம் 04 கருத்திட்ட மதிப்பீடுகளை தயாரித்து வெவ்வேறாக கிராம அபிவிருத்தி சங்கமொன்றிற்கு நிர்மாணம் ஒப்படைக்கப்பட்டிருந்தன. | நிதி பகுதிகளாக வழங்கப்பட்டமை மற்றும் அவசர தேவைபாடு ஆனதால், கிராம அபிவிருத்தி சங்கத்துடன் உடன்பட்டு மேற்கொண்டதென. | விதி பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | கருத்திட்ட இரண்டாம் கட்டத்தின் 4.5 மீற்றர் உயரத்திற்கு பதில் நிர்மாணித்தல் 2023 இரண்டாம் அரையாண்டில் மேற்கொண்ட போதும், 2023 முதல் அரையாண்டு விகிதங்கள் பயன்படுத்தப்பட்டிருந்தன் காரணமாக வேலை விடய இலக்கம் 04, இலக்கம் 05 மற்றும் இலக்கம் 06 இற்காக ரூபா 271,553 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. வேலை விடய இலக்கம் 09 பிரகாரம், கி.மீ. 120 தூரத்திலிருந்து மணல் போக்கு வரத்திற்கு 2023 இரண்டாம் அரையாண்டில் ரூபா 7,262 விலை விகிதம் (HSR) பயன்படுத்தப்பட வேண்டிய போதும், 2023 முதல் அரையாண்டின் ரூபா 8,698 விலை விகிதத்தை பயன்படுத்தி, 37.60 கன மீற்றரிற்கு ரூபா 1,430 வீதம் ரூபா 53,768 தொகையும், அத்திவார வழுவூட்டலிற்கு (Reinforcement) ரூபா 678 விலைக்கு பதிலாக ரூபா 776 விலை பயன்படுத்திய காரணத்தால், கி.கி. 858.1 இற்கு ரூபா 98 வீதம் ரூபா 84,094 தொகையும் கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தன. | மதிப்பீடு ஏற்றுக் கொள்ளப்பட்டதால் அதன் பிரகாரம் பணிகளை பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுத்ததென. | |
| (iii) | வேலை விடய இலக்கம் 07 வடிவமைப்பு பலகை (Form Work) இற்காக பாதை நியம வீதங்களின் (HSR) ST 065 (General Purposes) விகிதத்தை பயன்படுத்த வேண்டிய போதும், ST 061 பாலத்திற்கான விகிதம் பயன்படுத்தப்பட்ட காரணத்தால் 4.5 மீற்றர் உயரம் மற்றும் 3.00 எனும் 02 பாதுகாப்பு மதில்களிற்காக ரூபா 329,672 தொகை கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | உயரமான மதில் ஆகையால், பாலம் தாங்கும் மதிலிற்காக ST 61 விகிதம் பயன்படுத்தப்பட்டதென. | சரியான பாதை நியம வீதங்களின் (HSR) பிரகாரம் மதிப்பீடு தயாரித்து கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) மல்வத்த பிரிவின் குருந்துவத்த அனர்த்த கிராமத்தில் நீர் கருத்திட்ட 02 கட்டம் நிறைவேற்றப்படல் - ரூபா 1,611,565 | | |
| இக் கருத்திட்ட 02 இலக்க வேலை விடயம் பிரகாரம், 40 மி.மி குழாய் இடும் போது 2023 ஆண்டு இரண்டாம் அரையாண்டின் நீர்பாசன நியம விகிதம் (WSR) P:8 ரூபா 1,658 விகிதத்தை பயன்படுத்த வேண்டிய போதும், 2023 ஆண்டு முதலாம் அரையாண்டின் நீர்பாசன நியம விகிதம் (WSR) P:8 ரூபா 2,248 விகிதத்தை பயன்படுத்திய காரணத்தால், 659.86 மீற்றர்களிற்கு ரூபா 590 வீதம் ரூபா 388,752 தொகை கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | திருத்திய WSR கிடைக்காதமை மற்றும் பொது மக்கள் கோரிக்கையின் மீது நிலவிய WSR இனை பயன்படுத்தி வெளிப்படை தன்மையுடன் செயற்பட்டதென. | சரியான நீர் நியம விலை (WSR) விகிதத்தை பயன்படுத்தாத அலுவலர்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) குருந்துவத்த வியாபார கட்டிடத் தொகுதி நிர்மாணம் - ரூபா 74,612,900 | | |
| (i) இந்த கருத்திட்டத்திற்காக மேற்கொள்ளப்படாத ஆரம்ப செலவாக (Pilimeneries) ரூபா 708,750 தொகை கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | கருத்திட்ட நிர்மாணத்தை தொடர்ந்து மேற்கொண்டு செல்லும் போது காணப்பட்ட வழங்கல் நிலைமைகளை கவனத்திற் கொண்டு ஆரம்ப செலவின உருப்படிகளிற்கு சதவீத ரீதியாக குறித்த தொகையை செலுத்த பரிந்துரைத்துள்ளதென | ஆரம்ப செலவின் கீழ் தேவைப்பாடு மற்றும் வசதிகளை வழங்குவதற்காக மாத்திரம் கொடுப்பனவு செய்ய வேண்டும். |
| (ii) மேலதிக வேலை விடய இலக்கம் 31 கீழ் கற்களை உடைப்பதற்காக விஷேட விலை பகுப்பாய்வினால் 47.80 கன மீற்றர் கற்களை உடைக்க ரூபா 13,544 வீதம் ரூபா 647,403 தொகை செலுத்தியுள்ள போதும், உடைத்து அகற்றிய கறுங்கற்கள் கணக்கீடு செய்யப்பட்டு அல்லது துறையினுள் கோவைப்படுத்தப்பட்டேனும் இல்லாதிருக்கையில், கற்களை உடைத்தலிற்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | இந்த கற்களை துண்டுகளாக உடைக்க முடியாது போனதுடன், சிறு சிறு பகுதிகளாக உடைந்தன. அதனால் கற்களின் அமைப்பு பாரியளவான போதும், கற்கள் சிறு பகுதிகளாக உடைந்ததால் அவை மீண்டும் பயன்படுத்த முடியுமான மட்டத்திலான கற்கள் ஆகவில்லை. அதனால், ஆவணப்படுத்தி ஒப்படைக்க போதிய பெறுமதியுடன் இருக்காததால், எஞ்சியவைகளாக வேலைத் தளத்தினுள் குவிக்கப்பட்டுள்ளதென. | உடைக்கப்பட்ட கற்களை கோவைப்படுத்தி அளந்து குறித்த லொக் குறிப்புக்களில் காண்பிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | மேலதிக வேலை விடய இலக்கம் 32 கீழ் அத்திவாத்திற்கு வெட்டப்பட்ட அனைத்து 1,370 கன மீற்றர் மண்னை ஒரு கன மீற்றரிற்கு ரூபா 402 வீதம் போக்குவரத்திற்கு ரூபா 550,740 தொகை செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறாயினும், வெட்டப்பட்ட மண் கருத்திட்ட வேலைத் தளத்தினுள்ளே போடப்பட்டுள்ளமையால் மேற்கொள்ளாத வேலைக்காக கொடுப்பனவு செய்துள்ளமை அவதானிக்கப்பட்டது. | வீட்டு மனையை வெட்டும் போது திரல்கின்ற மண்ணை வேலைத் தளத்திலிருந்து அகற்றி போக்குவரத்து செய்வதற்குரிய கட்டணத்தை பரிந்துரைத்ததுடன், அத்திவாரத்தை நிர்மாணிக்கும் போது வெட்டப்பட்ட மண் மாத்திரம் மீண்டும் அத்திவாரத்தை நிரப்பும் வரை வேலைத் தளத்தில் குவிக்கப்பட்டு இருந்ததென. | மேற்கொள்ளப்பட்ட வேலைகள் தொடர்பாக லொக் குறிப்பிட்டு உரிய மேற்பார்வையுடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். |